# Plus One Commerce - Study Material

## +1 கணக்குப்பதிவியல்

## குறு மற்றும் சிறுவினா விடைகள்

## பாடம் 6 முதல் 8 வரை

Prepared by


# M.Muthu Selvam

M.Sc.,M.Com.,M.Ed.,M.Phil

PG.Asst., (Commerce)

MLWA.Hr.Sec.School


Madurai -1

Mail Id : dhakshina29@gmail.com

Mobile No : 98421 04826


# ஏதேனும் நான்கு துணைஏடுகளின் வகைகள்

- 1. கொள்முதல் ஏடு
- 2. கொள் முதல் திருப்பஏடு
- 3. விற்பனை ஏடு
- 4. விற்பனைத் திருப்பஏடு



# கொள்முதல் ஏடு
# Purchase Book

- கொள்முதல் ஏடு ஒரு துணை ஏடு ஆகும்.
- இதில், கடனுக்கு சரக்கு வாங்குவது மட்டுமே பதிவு செய்யப்படுகிறது.



| Purchases Day Book | | | | | (page 38) |
|---|---|---|---|---|---|
| *Date* | *Details* | *Folio* | *Goods* | *VAT* | *Total* |
| 2013 | | | £ | £ | £ |
| Dec 9 | Jarvis & Sons | PL 8 | 144.00 | 28.80 | 172.80 |
| Dec 13 | Morton Products | PL 30 | 280.00 | 56.00 | 336.00 |
| Dec 17 | K Howard | PL 17 | 520.00 | 104.00 | 624.00 |
| Dec 30 | T Joshi | PL 27 | 72.00 | 14.40 | 86.40 |
| | | | 1,016.00 | 203.20 | 1,219.20 |
| | | | GL43 | GL67 | * |

# கொள்முதல் ஏடு
# Purchase Book



Purchase day book


Exhibit 15.1

| Purchases Day Book | | Invoice No. | Folio | Amount (page 49) |
|---|---|---|---|---|
| 2013 | | | | £ |
| Sept 1 | J. Blake | 9/101 | | 560 |
| 8 | B. Hamilton | 9/102 | | 1,380 |
| 19 | C. Brown | 9/103 | | 230 |
| 30 | K. Gabriel | 9/104 | | 510 |
| | | | | 2,680 |

- சொத்துகள் வாங்கினாலும், சரக்குகள் ரொக்கத்திற்கு வாங்கினாலும் கொள்முதல் ஏட்டில் பதிவு செய்யப்படுவது இல்லை.
- கொள்முதல் ஏடு, கொள்முதல் நாளேடு எனவும் அழைக்கப்படுகிறது.

# கொள்முதல் திருப்ப ஏடு
# Purchase Return Book

- கொள்முதல் திருப்ப ஏடு ஒரு துணை ஏடாகும்.
- இதில், ஏற்கனவே கொள்முதல் செய்து பெறப்பட்ட சரக்குகளை, ரொக்கம் உடனடியாக பெறாமல் சரக்கு அளித்தவருக்கே திருப்பி அனுப்புகின்ற நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன.



# கொள்முதல் திருப்ப ஏடு
## Purchase Return Book

| Purchase Return Book | | | | |
|---|---|---|---|---|
| Date | Particulars | Debit Note No. | Amount | |
| 05-12-2016 | Goods returned, Qty, Rate, Bill No | 123 | ₹ | 2,000 |
| 11-12-2016 | Goods returned, Qty, Rate, Bill No | 124 | ₹ | 5,000 |
| 15-12-2016 | Goods returned, Qty, Rate, Bill No | 125 | ₹ | 12,000 |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| Total | | | ₹ | 19,000 |

- சரக்குகள் அளித்தவருக்கே திரும்பச் செல்வதால், வெளித்திருப்பம் ஏற்படுகின்றது.
- எனவே, இந்த ஏடு வெளித்திருப்ப ஏடு அல்லது வெளிச்செல் திருப்ப குறிப்பேடு என்று அழைக்கப்படுகிறது.

# விற்பனை ஏடு Sales Book

- விற்பனை ஏடு துணை ஏடுகளில் ஒன்றாகும்.
- இதில், கடனுக்கு விற்கப்படும் சரக்குகள் மட்டுமே பதியப்படும்.
- இங்கு சரக்கு என்பது நிறுவனம் வழக்கமாக வாங்கி விற்கும் பொருளையே குறிக்கும்.
- சரக்குகள் ரொக்கத்திற்கு விற்பனை செய்வது இதில் பதியப்படுவதில்லை.



# விற்பனை ஏடு Sales Book



An example of the SALES Day Book

| Sales Day Book | | | | | (page 26) |
|---|---|---|---|---|---|
| Date | Details | Folio | Goods | GST | Total |
| 2013 | | | £ | £ | £ |
| May 3 | Champion Sports | SL12 | 400.00 | 80.00 | 480.00 |
| May 13 | BD Sports Ltd | SL39 | 84.00 | 16.80 | 100.80 |
| May 22 | Delta Products | SL125 | 120.00 | 24.00 | 144.00 |
| May 29 | Zhang Sports | SL249 | 178.00 | 35.60 | 213.60 |
| | | | 782.00 | 156.40 | 938.40 |
| | | | GL44 | GL50 | * |



- இதைப்போலேவே, சொத்துக்களை கடனுக்கு விற்பதுவோ அல்லது ரொக்கத்திற்கு விற்பதுவோ விற்பனை ஏட்டில் இடம் பெறாது.
- இவ்வேடு விற்பனை நாளேடு, விற்பனைக் குறிப்பேடு, மற்றும் விற்பனைப் பதிவேடு என்றும் அழைக்கப்படுகிறது.


# விற்பனைத் திருப்ப ஏடு
## Sales Return Book

- விற்பனைத் திருப்பஏடு, துணை ஏடுகளில் ஒன்றாகும்.
- இது விற்பனைச் செய்த சரக்குகள் உடனடியாக ரொக்கம் அளிக்காமல் திருப்பிப் பெறப்படுவதைப் பதிவு செய்ய உதவுகிறது.

Sales Return Book

| Date | Particulars | Credit Note No. | L.F. | Amount Rs. |
|---|---|---|---|---|
| | | | | |

# விற்பனைத் திருப்ப ஏடு
# Sales Return Book



Format of sales return book

| Date | Particular | L.F. | Credit Note | Amount |
|---|---|---|---|---|
| | | | | |

- சரக்குகளை வாடிக்கையாளரிடம் இருந்து திருப்பப் பெறுவது ‘உள் திருப்பம்’ எனப்படும்.
- சொத்துகள் திரும்பப் பெறுவது அல்லது சரக்குகள் ரொக்கம் அளிக்கப்பட்டு திரும்பப் பெறுவது இந்த ஏட்டில் பதிவு செய்யப்படமாட்டாது.

# பற்றுக்குறிப்பு Debit Note

- பற்றுக் குறிப்பு என்பது ஒரு ஆவணம், சீட்டு அல்லது சரக்குத்திருப்பி அனுப்புபவருக்கு அளிக்கப்படும் அறிக்கை ஆகும்.



Logo

**Debit Note**


ORIGNAL
DUPLICATE

Serial No. : 1 | Dated : 04/10/2006 | Time of Supply 14:35:12 | Term of Sale : Credit | Ref. Sup/001/

| | | | |
|---|---|---|---|
| Supplier's Name | SUPPLIER 1 | Buyer's Name | Demo. Copy |
| Address | 330, 3rd Floor, Al-Rehman Trade Center, New Challi, Main Shahrah-e-Liaquat, Karachi - | Address | NOT FOR OFFICIAL USE |
| Tel/Fax # | 0320-4016682 / | Telephone # | 2470942 / 2412665 |
| GST # | 34-34-3456-345-34 | GST # | http://www.cleantouch.com.pk |
| NTN : | | NTN : | . |

| Quantity | Description of Goods | Rate | Value Excluding Taxs Rs.Ps | Rate of S.Tax % | Sales Tax Charged | F.E.D. @ 1% | Value Including Taxs Rs.Ps |
|---|---|---|---|---|---|---|---|
| 11.000 | ITEM 1 | 50.0000 | 544.50 | 15.00 | 81.68 | 5.45 | 631.63 |

# பற்றுக்குறிப்பு Debit Note


DEBIT NOTE

DEBIT NOTE NO.________
YOUR INVOICE NO.________

ROY & CO.
CANAL EAST ROAD
KOLKATA

M/S ANAND & SONS
SALTLAKE, KOLKATA

| | Rs. |
|---|---|
| Return of 15 Kg. Sugar received damaged in transit @ Rs 35 per kg. | 525.00 |
| | 525.00 |

E. & O.E.

for Roy & Co.

Date:________


tallyseekhe

(Signature)

- இந்த அறிக்கையில், திருப்பி அனுப்பிய சரக்கின் விவரம், யாருக்கு திருப்பி அனுப்பப்பட்டதோ அவரது பெயர், திருப்பி அனுப்பப்பட்ட சரக்கின் நிகரத் தொகை மற்றும் திருப்பி அனுப்பியதற்கான காரணங்கள் போன்ற விவரங்களைக் கொண்டிருக்கும்.

# வரவுக்குறிப்பு credit note

- வரவுக்குறிப்பு என்பது விற்பனையாளர், வாடிக்கையாளரிடமிருந்து சரக்கினைப் பெற்றுக் கொண்டதற்கான அறிக்கை ஆகும்.
- இதில், திருப்பிப் பெறப்படும் சரக்கின் விவரம், திருப்பும் அளவு மற்றும் அதன் மதிப்பு போன்ற விவரங்கள் இருக்கும்.



Xin Cube Inc
380 Francisco St
San Francisco
CA 94133
US
Phone: (415) 989-1188 Fax: (415) 989-2288
Email: admin@xincube.com
Website: www.xincube.com

**Credit Note**
Code: CN13.03.0001
Date: 20-Mar-2013
Reg No: 74-2999212
Tax No:

Bill To: gary
Mobile Depot
PO Box 309
Vail CO 81658
US
Phone: 970-949-5557 Fax: 970-949-5559
Tax No:

Ship To: gary
Mobile Depot
PO Box 309
Vail CO 81658
US
Phone: 970-949-5557 Fax: 970-949-5559

| Sales Person | Order No. | Shipping Date | Shipping Terms | Payment Terms | Currency Code |
|---|---|---|---|---|---|
| Charles Gordon | | 15-Mar-2013 | | 30 Days | USD |

| No. | Quantity | Item Code | Description | Unit Price | Discount | Amount |
|---|---|---|---|---|---|---|
| 1 | 100 PCS | INV00003 | SAMSUNG GALAXY TAB 10.1" CASING - BLACK | 40.00 | 0.00 | 4,000.00 |

| Sub Total | Discount | Shipping | Tax | Total |
|---|---|---|---|---|
| 4,000.00 | 0.00 | 0.00 | 0.00 | 4,200.00 |
| VAT | | | Deposit | Amt Due |
| 200.00 | 0.00 | 0.00 | 0.00 | 4,200.00 |


Note:
Thanks for your business!
Generated Using Xin Inventory http://www.xininventory.com

Authorized Signature,

Page : 1 / 1

# உரிய குறிப்பேடு Journal Proper

- துணை ஏடுகளான ரொக்க ஏடு, கொள்முதல் ஏடு, விற்பனை ஏடு, கொள்முதல் திருப்ப ஏடு, விற்பனைத் திருப்ப ஏடு, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு மற்றும் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு போன்ற ஏடுகளில் பதிய முடியாத எஞ்சிய பதிவுகள் உரிய குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகின்றன.



# உரிய குறிப்பேடு Journal Proper


Journal Proper

| Date | Particulars | Ref. | L.F. | Debit ₹ | Credit ₹ |
|---|---|---|---|---|---|
| April 10 | Furniture and Fittings A/c | Dr. | | 4,00,000 | |
| | To Furniture Mart A/c | | | | 4,00,000 |
| | (being the purchase of furniture on credit) | | | | |
| 30 | Repairs to Machinery A/c | Dr. | | 5,00,000 | |
| | To Machinery A/c | | | | 5,00,000 |
| | (being the rectification of a wrong posting of a repair expense to asset A/c) | | | | |

- உரிய குறிப்பேட்டில் அல்லது பொதுக் குறிப்பேட்டில் வேறு எங்கும் எந்த துணைப்பிரிவிலும் பதிவுப் பெறாத நடவடிக்கைகளுக்கான குறிப்பேடுகள் பதிவு செய்யப்படுகின்றன.


# மாற்றுச்சீட்டின் வரைவிலக்கணம்
## Definition of Bills of Exchange

- மாற்றுமுறை ஆவணச்சட்டம் 1881-ன் படி, ‘மாற்றுச்சீட்டு என்பது குறிப்பிட்ட நபருக்கோ அவரது ஆணைக்கேற்பவோ அல்லது அந்த ஆவணத்தைக் கொண்டு வருபவருக்கோ குறிப்பிட்ட பணத்தை செலுத்துமாறு, குறிப்பிட்ட நபருக்கு, ஒருவர் எந்த நிபந்தனையும் இணைக்காமல், எழுத்து மூலமாகக் கையொப்பமிட்டு விடுக்கும் ஆணைத் தாங்கிய ஆவணமாகும்’.



# தொடக்கப் பதிவு Opening Entry

- ஒவ்வொரு கணக்காண்டின் இறுதியிலும், அனைத்து பெயரளவு கணக்குகளும் முடிக்கப்படுகின்றன.
- ஆனால், அதன் முந்தைய ஆண்டுகளின் சொத்துகள், பொறுப்புகள் மற்றும் முதலுடன் வணிகம் தொடருகிறது.
- எனவே, இத்தகைய கணக்குகளை நடப்பு ஆண்டிற்கு கொண்டு வரவேண்டியுள்ளது.



| | | ₹ | ₹ |
|---|---|---|---|
| Cash Account | .. Dr. | 5,000 | |
| Cash at Bank Account | .. Dr. | 43,000 | |
| Sundry Debtors (Customers) | .. Dr. | 37,000 | |
| Stock Account | .. Dr. | 40,000 | |
| Furniture Account | .. Dr. | 15,000 | |
| Office Equipment Account | .. Dr. | 20,000 | |
| To Sundry Creditors (Suppliers) | | | 20,000 |
| To Capital Account | | | 1,40,000 |

# தொடக்கப் பதிவு Opening Entry




- இதற்காக நடப்பு ஆண்டின் தொடக்கத்தில் நிறுவனத்தின் சொத்துகள், பொறுப்புகள் மற்றும் முதல் போன்றவைகளின் இருப்பிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளை, பதிவது தொடக்கப்பதிவு ஆகும்.
- இக்குறிப்பேட்டுப் பதிவுகளில் சொத்துகளை பற்று வைக்கவேண்டும். பொறுப்புகள் மற்றும் முதல் கணக்குகளை வரவு வைக்கவேண்டும்.

# இடாப்பு Invoice

- இடாப்பு என்பது, ஒரு வணிக ஆவணம் அல்லது இரசீது அல்லது அறிக்கை ஆகும்.
- இதனை, விற்பனையாளர் தயார் செய்து சரக்கினை வாங்குபவருக்கு அளிக்கிறார்.



# இடாப்பு Invoice


LETTERPRESS DESIGNS

**INVOICE**

Number 76 - 981102

| ITEM DESCRIPTION | QTY | PRICE | TOTAL |
| --- | --- | --- | --- |
| Graphic Design | 25 | $ 20.00 | $ 500.00 |
| Web Design (per page) | 5 | $ 25.00 | $ 125.00 |
| Web Development | 5 | $ 50.00 | $ 250.00 |
| Brand Bible | 1 | $ 30.00 | $ 30.00 |
| Logo Studies | 3 | $ 30.00 | $ 90.00 |
| | SUB TOTAL | | $ 995.00 |
| | TAX (15%) | | $ 149.25 |
| | GRAND TOTAL | | $ 1144.25 |

PAYABLE TO
Stephanie Chan
25 Wood St. West Boylston,
MA. 01583

BANK DETAILS
Stephanie Chan
United Fremont Bank
Acct. No. 229 - 2091 - 1092 - 01

THANK YOU

Letterpress Designs - (04) 298 1092 4095 - +76 209 2872 0192 - letterpress@info.com

- இதில், விற்பனைச் செய்யப்படும் சரக்கின் அளவு, தரம், விலை, மொத்தமதிப்பு போன்ற விவரங்கள் இடம் பெற்றிருக்கும்.
- எனவே, இடாப்பு என்பது வாங்குபவர் மற்றும் விற்பவர் இருவருக்கும் ஒரு முதன்மையான ஆவணமாக உள்ளது.


# வியாபாரத் தள்ளுபடி Trade Discount

- வியாபாரத் தள்ளுபடி என்பது, விற்பனையாளரால் வாங்குபவருக்கு, சரக்குகளின் பட்டியல் விலையிலிருந்து குறைத்து வழங்குவதாகும்.
- இது, வியாபார வழக்கமாகவோ அல்லது சரக்குகளை அதிக எண்ணிக்கையில் கொள்முதல் செய்யும் போதோ வழங்கப்படுகிறது.




# சலுகை நாட்கள் Days of Grace

- மாற்றுச் சீட்டினை எழுதும் பொழுது ஒரு குறிப்பிட்ட காலம் கடந்த பிறகு, தொகை செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் எந்த தேதியில் தொகை செலுத்தப்பட வேண்டுமோ அந்த தேதியே செலுத்தற்குரிய நாள் எனப்படுகிறது.



# சலுகை நாட்கள் Days of Grace



MATURITY DATE

*The date on which a bill of exchange falls due for payment*

- In the case bill is payable after certain days after sight, the maturity date is calculated by adding **3 days of grace** to the period after which the bill is payable.
- In the case the date of maturity happens on public holiday including Sunday, the bill falls due for payment on the day preceding the public holiday.

Example :-***Ascertain the date of maturity of a bill payable 100 days after sight and which is presented for sight on 4th May 2013.***


100 days from 4th May work out as 12th August 2013 + 3 grace days = 15 August 2013, Since 15th August is a public holiday, maturity date of bill will be 14th August 2013

- செலுத்தற்குரிய நாளை கணக்கிடும் பொழுது, மாற்றுச் சீட்டின் தவணைக்காலம் முடிந்த பிறகு மூன்று நாள்கள் கூட்டப்படுகிறது.

இவ்வாறு கூடுதலாகச் சேர்க்கப்படும் அந்த மூன்று நாள்களுக்கு சலுகை நாள்கள் எனப்பெயர்.

# மேலெழுதுதல்
# Endorsement

- மாற்றுச் சீட்டின் உரிமையை, வேறொருவருக்கு மாற்றித் தருவதற்காக, மாற்றுச் சீட்டின்
- முகப்பில் அல்லது பின்புறத்தில் கையொப்பமிடுதல் மேலெழுதுதல் எனப்படுகிறது.



# மாற்றுச் சீட்டினைத் தள்ளுபடி செய்தல்


## Discounting of a bill

- மாற்றுச்சீட்டை வைத்துள்ளவர், அதன் முதிர்வுக்கு முன்பே பணம் பெறவிரும்பினால், அதனை வங்கியில் தள்ளுபடி செய்து ரொக்கம் பெறுவதையே மாற்றுச் சீட்டினைத் தள்ளுபடி செய்தல் என்று பெயர்.
- இதற்காக, வங்கியர் ஒரு சிறு தொகையைத் தள்ளுபடியாகப் பெற்றுக் கொள்வார்.
- மீதமுள்ள தொகையினை உடனடியாக கொடுத்து விடுவார்.



# மாற்றுப் பதிவுகள்
# Transfer Entry

- மாற்றுப்பதிவுகள் என்பது, ஒரு கணக்கில் உள்ள தொகையினை மற்றொரு கணக்கிற்கு மாற்றும் குறிப்பேட்டுப்பதிவு ஆகும்.



# கொள்முதல் ஏட்டின் மாதிரி படிவம்

## கொள்முதல் ஏடு

| நாள் | விவரம் | உள்வரு இடாப்பு எண் | பே.ப .எ | விளக்கம் | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|
| | | | | | |

- குறிப்பு : 1. கடனுக்கு வாங்கபப்படும் சரக்குகள் அனைத்தும் கொள்முதல் ஏட்டில் பதியபப்படும்.
- 2. ரொக்கத்திற்கு சரக்கு வாங்குதல், சொத்துகளை கடனுக்கு மற்றும் ரொக்கத்திற்கு வாங்குதல் இதில் பதியப்படுவது இல்லை

# கொள்முதல் திருப்ப ஏட்டின் மாதிரி படிவம்.

- கொள்முதல் திருப்ப ஏடு

| நாள் | விவரம் | பற்று குறிப்பு எண் | பே.ப.எ | விளக்கம் | மொத்த தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|

# விற்பனை ஏட்டின் மாதிரி படிவம்

## விற்பனை ஏடு

| நாள் | விவரம் | வெளிச்செல் இடாப்பு எண் | பே. ப.எ | விளக்கம் | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|
| | | | | | |

- குறிப்பு : 1. கடனுக்கு விற்கப்படும் சரக்குகள் அனைத்தும் விற்பனை ஏட்டில் பதியப்படும்.
- 2. ரொக்கத்திற்கு சரக்கு விற்றல் இதில் பதியப்படுவது இல்லை. இதைப் போன்றே சொத்துகளை கடனுக்கு விற்றல் மற்றும் ரொக்கத்திற்கு விற்றல் இதில் பதியப்படுவது இல்லை

# விற்பனை திருப்ப ஏட்டின் மாதிரி படிவம்

- விற்பனை திருப்ப ஏடு

| நாள் | விவரம் | வரவு குறிப்பு எண் | பே.ப.எ | விளக்கம் | மொத்த தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

பின் வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடுக.

- 1 ரொக்கத்திற்கு சரக்கு விற்றது
- 2 கடனுக்கு சரக்கு விற்றது
- 3 கடனுக்கு சரக்கு வாங்கியது
- 4 உரிமையாளர் சரக்குகளை தனது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்தது.
- 5 சரக்கு அளித்தோருக்கு உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு.
- 6 கடனுக்கு சொத்துகள் வாங்கியது

# விடை

- 1. ரொக்க ஏட்டில்
- 2. விற்பனை ஏட்டில்
- 3. கொள்முதல் ஏட்டில்
- 4. உரிய குறிப்பேட்டில் / பொதுக் குறிபேட்டில்
- 5. கொள்முதல் திருப்ப ஏட்டில்
- 6. உரிய குறிப்பேட்டில். (குறிப்பாக கொள்முதல் ஏட்டில் பதியப்படுவது இல்லை )

# துணை ஏடுகளின் நன்மைகள்
## Advantages of Subsidiary Books

- i. வணிக நடவடிக்கைகளின் சரியான மற்றும் முறையான பதிவு
- அனைத்து வணிக நடவடிக்கைகளும் ரொக்க நடவடிக்கைகள் மற்றும் ரொக்கமற்ற நடவடிக்கைகள் எனப் பிரிக்கப்படுகின்றன.



# துணை ஏடுகளின் நன்மைகள்

## Advantages of Subsidiary Books

- ரொக்கமற்ற நடவடிக்கைகள் மேலும் கடன் கொள்முதல், கடன் விற்பனை மற்றும் திருப்பம் என்று பாகுப்படுத்தப்படுகின்றன.



- ஒவ்வொரு வகையான நடவடிக்கைக்கும் தனித்தனியாக, அதற்குரிய ஏடுகள் பயன்படுத்துவதால், நடவடிக்கைகள் சரியானமற்றும் முறையான துணை ஏடுகளில் பதிவு செய்யப்படுகின்றன.

# துணை ஏடுகளின் நன்மைகள்

## Advantages of Subsidiary Books

- II வசதியான எடுத்தெழுதுதல்
- அனைத்து நடவடிக்கைகளிலும் ஒத்த தன்மையுடையவைகள் ஓரிடத்தில், அதாவது ஒரு துணைஏட்டில் பதிவு செய்யப்படுகின்றன.




- இது கொள்முதல் கணக்கு, விற்பனை கணக்கு மற்றும் சம்பந்தப்பட்ட ஆள்சார் கணக்குகளில் எடுத்தெழுதுவதை எளிதாக்குகிறது.

# துணை ஏடுகளின் நன்மைகள்

## Advantages of Subsidiary Books

- iii. வேலைப் பகிர்வு
- குறிப்பேடு பல துணை ஏடுகளாகப்பிரிக்கப்படுவதால், வேலைப்பகிர்வு ஏற்படுகிறது.
- அதனால் வெவ்வேறு நபர்கள், வெவ்வேறு துணை ஏடுகளில் ஒரே நேரத்தில் பதிவு செய்யமுடிகிறது. இதனால், விரைவாக பணியினை முடிக்க முடிகிறது.



# துணை ஏடுகளின் நன்மைகள்
## Advantages of Subsidiary Books

- iv. திறன் அதிகரிப்பு **Efficiency**
- வேலைப்பகிர்வு காரணமாக சிறப்படைதலின் நன்மை கிடைக்கிறது.
- ஒரு நபர், ஒரே வேலையை திரும்பத் திரும்ப செய்வதால் அவ்வேலையைக் கையாள்வதில் அவரது திறமை அதிகரிக்கிறது.



# துணை ஏடுகளின் நன்மைகள்
## Advantages of Subsidiary Books



- v.முடிவெடுத்தலுக்கு உதவுகிறது Helpful in decision making
- ஒவ்வொரு நடவடிக்கையின் முழு விவரமும் தனித்தனியாக துணைஏடுகள் மூலம் கிடைக்கின்றன.
- இவ்விவரங்களை நிர்வாகம் எதிர்கால முடிவெடுத்தலுக்கு பயன்படுத்த முடியும்.

# துணை ஏடுகளின் நன்மைகள்
## Advantages of Subsidiary Books





- vi. முழுமையான தகவல்களைப் பெறமுடிகிறது **Detailed information available**
- ஒரு குறிப்பிட்ட தன்மையுடைய அனைத்து நடவடிக்கைகளும், ஒரு துணை ஏட்டில் பதிவு செய்யப்படுவதால், முழுமையானத கவல்களைப் பெறமுடிகிறது.
- மாதவாரியான, காலாண்டு என்ற காலத்திற்கான மொத்தவிவரம் எளிதில் அறிய முடிகிறது.

# மாற்றுச்சீட்டில் மேலெழுதுதல்


## Endorsement of a bill

- மாற்றுச்சீட்டின் உரிமையை வேறொருவருக்கு மாற்றித் தருவதற்காக, மாற்றுச்சீட்டின் முன்புறத்தில் அல்லது பின்புறத்தில் கையொப்பம் இடுவதை மேலெழுதுதல் என்பர்.
- மாற்றுச்சீட்டை இதற்கென மேலெழுதி மாற்றிக் கொடுப்பவர் மேலெழுதுநர் எனப்படுகிறார்.



# மாற்றுச்சீட்டில் மேலெழுதுதல்

## Endorsement of a bill




- மாற்றுச்சீட்டு மேலெழுதி யாருக்கு கொடுக்கப்படுகிறதோ அவர் மேலெழுதப்பெறுநர் எனப்படுகிறார்.
- மேலெழுதப்பெறுநர் மாற்றுச்சீட்டுக்குரிய தொகையைப் பெறும் உரிமையைப் பெறுகிறார்.


# மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல் Discounting of a bill




- மாற்றுச் சீட்டை வைத்துள்ளவர், அதன் முதிர்வுக்கு முன்பே பணம் பெறவிரும்பினால், அதனை வங்கியில் தள்ளுபடி செய்து ரொக்கம் பெறலாம். இம்முறைக்கு மாற்றுச்சீட்டினைத் தள்ளுபடி செய்தல் என்று பெயர்.


# மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல்
## Discounting of a bill

- இதற்காக, வங்கியர் ஒரு சிறு தொகையைத் தள்ளுபடியாகப் பெற்றுக் கொள்வார். மீதமுள்ள தொகையினை உடனடியாக கொடுத்து விடுவார்.



# ரொக்க ஏடு Cash book

- ரொக்க ஏடு என்பது, ரொக்க நடவடிக்கைகளை மட்டும், நாள் வரிசைப்படி பதியக்கூடிய ஒரு ஏடாகும்.
- ரொக்க நடவடிக்கைகள் முதன் முதலில் ரொக்க ஏட்டில் பதியப்படுவதால், இது ஒரு முதல் மூலப்பதிவேடு அல்லது முதன்மைப் பதிவேடு ஆகும்.



CASH BOOK

| Date | Details | Folio | Discount Allowed | Cash | Bank | Date | Details | Folio | Discount Recieved | Cash | Bank |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2009 | | | $ | $ | $ | 2009 | | | $ | $ | $ |
| May 1 | Balances | b/f | | 100 | 2 000 | May 3 | Motor Van | GL | | 200 | |
| May 2 | Sales | GL | | | 250 | May 8 | Rent | GL | | | 150 |
| May 5 | Sales | GL | | 250 | | May 10 | Wages | GL | | | 120 |
| May 18 | B.Butler | SL | 10 | | 90 | May 19 | C.Bain | PL | 20 | | 200 |
| May 22 | S.Commos | SL | 5 | | 50 | May 24 | V.Bryan | PL | 3 | | 30 |
| May 28 | Cash | C | | | 50 | May 24 | Drawings | GL | | | 20 |
| | | | | | | May 28 | Bank | C | | 50 | |
| | | | | | | May 31 | Balances | c/d | | 100 | 1 920 |
| | | | 15 | 350 | 2 440 | | | | 23 | 350 | 2 440 |
| June 1 | Balances | b/d | | 100 | 1 920 | | | | | | |

# ரொக்க ஏடு Cash book




Dr. **Cash Book** Cr.

| Receipts | | | | | Payment | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Date | Particulars | V No. | L.F. | Amount (Rs) | Date | Particulars | V. No. | L.F. | Amount (Rs) |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

- ரொக்க நடவடிக்கைகள் என்பது இங்கு வங்கி நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாக இருக்கலாம்.
- ரொக்க ஏட்டில் ரொக்கப் பெறுதல்கள் பற்றுப் பக்கத்திலும், ரொக்கச் செலுத்தல்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்படுகின்றன.


# ரொக்க ஏட்டின் வகைகள் Types of cash book

- i. தனிப்பத்தி ரொக்க ஏடு அல்லது சாதாரண ரொக்க ஏடு ( ரொக்கப்பத்தி மட்டும்)
- ii. ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏடு (இருபத்தி ரொக்க ஏடு)
- iii. ரொக்கம், தள்ளுபடி மற்றும் வங்கிப் பத்திகளுடைய ரொக்க ஏடு ( முப்பத்தி ரொக்கஏடு)
- இந்த முதன்மையான ரொக்க ஏட்டினைத் தவிர, சில்லறை ரொக்க ஏடும் தயாரிக்கப்படுகிறது.



# சாதாரண ரொக்க ஏடு simple cash book

- தனிப்பத்தி ரொக்க ஏடு அல்லது சாதாரண ரொக்கஏடு, ஒரு பேரேட்டுக் கணக்கைப் போன்று, ஒவ்வொரு பக்கத்திலும் தொகைக்கான பத்தி ஒன்றை (ரொக்க பத்தி) கொண்டிருக்கும்.
- ரொக்க நடவடிக்கைகள் மட்டும் இந்த ஏட்டில் பதியப்படும்.
- அனைத்து ரொக்கப் பெறுதல்களும் மற்றும் செலுத்தல்களும் இந்த ஏட்டில் முறையாகப் பதியப்படுகின்றன.



SOLUTION

Dr. Cash Book Cr.

| Date | Receipts | R. No. | L.F. | Amount Rs | Date | Payments | V. No. | L.F. | Amount Rs |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2005 | | | | | 2005 | | | | |
| March 1 | To Balance b/d | | | 200 | March 2 | By Purchase A/c | | | 1,500 |
| 1 | To Sales A/c | | | 3,000 | 7 | By Bank A/c | | | 1,000 |
| 4 | To Rama A/c | | | 2,500 | 9 | By Purchase A/c | | | 250 |
| 20 | To Sales A/c | | | 1,300 | 13 | By Taxi Charges A/c | | | 140 |
| 21 | To Gopal A/c | | | 2,000 | 15 | By Wages A/c | | | 100 |
| | | | | | 24 | By Auto Charges A/c | | | 40 |
| | | | | | 28 | By Purchase A/c | | | 1,500 |
| | | | | | 29 | By Furniture A/c | | | 1,000 |
| | | | | | 30 | By Salaries A/c | | | 1,500 |
| | | | | | 30 | By Wages A/c | | | 470 |
| | | | | | 31 | By Rent A/c | | | 1,000 |
| | | | | | 31 | By Mahesh's A/c | | | 250 |
| | | | | | 31 | By Balance c/d | | | 250 |
| | | | | 9,000 | | | | | 9,000 |
| April 1 | To Balance b/d | | | 250 | | | | | |


# தனிப்பத்தி ரொக்க ஏட்டின் படிவம் தருக.

| நாள் | பெறுதல்கள் | இரசீது எண் | பே.ப எ | தொகை | நாள் | செலுத்தல்கள் | சான்றுசீட்டு எண் | பே. ப. எ | தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|

- குறிப்பு : கடன் நடவடிக்கை இந்த ரொக்க ஏட்டில் பதிவதில்லை

# இருபத்தி ரொக்க ஏடு
## Double Column Cash Book

- இது ரொக்கம் மற்றும் தள்ளுபடிபத்திகளையுடைய ரொக்க ஏடு ஆகும்.
- தள்ளுபடி மற்றும் ரொக்கம் என்ற இரு பத்திகளை, பற்று மற்றும் வரவு என்ற இரண்டு பக்கங்களிலும் கொண்டிருப்பதால் இதனை இருபத்தி ரொக்கஏடு என்று அழைக்கிறோம்.



# இருபத்தி ரொக்க ஏடு

## Double Column Cash Book

### Double column cash Book

2012 Jan 1 Paid rent Rs. 1300

Jan 5 Paid to Ram & Co. Rs.3950 Discount Received Rs. 50

Jan 6 Received from Gupta & Co. Rs. 9900 Discount allowed Rs. 100

Double column cash Book

| Date | Receipts | L.F | Discount | Amt. | Date | Payments | LF | Discount | Amt. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2012 | | | | | 2012 | | | | |
| Jan 6 | To Gupta | | 100 | 9900 | Jan 1 | By Rent | | | 1300 |
| | | | | | Jan 5 | By Ram | | 50 | 3950 |
| | | | | | Jan 31 | By Bal c/d | | | 4650 |
| | | | 100 | 9900 | | | | 50 | 9900 |
| Feb 1 | To Bal b/d | | | 4650 | | | | | |


- சாதாரணரொக்க ஏடு தயாரிக்கப்படும் முறையிலேயே இருபத்தி ரொக்க ஏடும் தயாரிக்கப்படுகிறது.
- இதில் தள்ளுபடி பத்தி என்ற ஒரு பத்தி கூடுதலாக இரு பக்கங்களிலும் சேர்க்கப்பட்டுள்ளது.

# இருபத்தி ரொக்க ஏட்டின் படிவம் தருக.

| நாள் | பெறுதல்கள் | இ.எ | பே. ப எ | தள்ளுபடி தொகை | ரொக்கம் | நாள் | செலுத்தல்கள் | சா. எ | பே. ப. எ | தள்ளுபடி தொகை | ரொக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

# முப்பத்தி ரொக்க ஏடு
## Three Column Cash Book

- ரொக்கம், வங்கி மற்றும் தள்ளுபடி என்ற மூன்று தொகைப் பத்திகளைக் கொண்டிருக்கும் ஏடு முப்பத்தி ரொக்க ஏடு ஆகும்.
- சாதாரண ரொக்க ஏடு மற்றும் இருபத்தி ரொக்க ஏடுகள் தயாரிக்கும் அதே முறையில்தான் இந்த ரொக்க ஏடும் தயாரிக்கப்படுகிறது.


Rashid Khwaja Trading Co.

*Cash Book*

For the month ended October 30th, 2016

| Receipt side | | | | | | | Payment side | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Date | | Description | Ref | Cash | Bank | Dis. | Date | | Description | Ref | Cash | Bank | Dis. |
| 2016 | | | | | | | 2016 | | | | | | |
| Oct | 1 | *Balance b/d* | | 200 | | | Oct | 1 | *Balance b/d* | | | 400 | |
| | 2 | Sales | | 1,500 | | | | 2 | Bank (c) | | 1,200 | | |
| | 2 | Cash (c) | | | 1,200 | | | 7 | Habib & co. | | | 150 | |
| | 10 | Abdul | | | 850 | | | 14 | Salaries | | 250 | | |
| | 16 | Bank (c) | | 160 | | | | 14 | Purchases | | 140 | | |
| | 21 | Sales | | 21 | | | | 16 | Cash (c) | | | 160 | |
| | 25 | Aftab Ahmed | | 360 | | 10 | | 21 | Wages | | 120 | | |
| | 30 | Cash (c) | | | 360 | | | 24 | Abdul | | | 850 | |
| | | | | | | | | 27 | Jones | | | 175 | 5 |
| | | | | | | | | 30 | Bank (c) | | 360 | | |
| | | | | | | | | | *Balance c/d* | | 171 | 675 | |
| | | Total | | 2,241 | 2,410 | 10 | | | Total | | 2,241 | 2,410 | 5 |
| Sep | 1 | *Balance b/d* | 171 | | 675 | | | | | | | | |

# ரொக்கத் தள்ளுபடி Cash Discount

- குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் அல்லது அதற்கு முன்னரோ சரியாக தொகையை திரும்பச் செலுத்தும் நபர்களுக்கு, வழங்கக்கூடிய தள்ளுபடி ரொக்கத் தள்ளுபடி எனப்படும்.
- கடனீந்தோர் கணக்கில், தள்ளுபடி அளித்தது (நட்டம்) என்றும்,



# ரொக்கத் தள்ளுபடி Cash Discount





- கடனாளிகள் கணக்கில். தள்ளுபடி பெற்றது (ஆதாயம்) என்றும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.
- வாடிக்கையாளர்கள், தவணை நாளுக்குள் தொகையைச் செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு இத்தள்ளுபடி வழங்கப்படுகிறது.

# வியாபாரத் தள்ளுபடி Trade discount

- வியாபாரத் தள்ளுபடி என்பது, விற்பனையாளரால் வாங்குபவருக்கு, சரக்குகளின் பட்டியல் விலையிலிருந்து குறைத்து வழங்குவதாகும்.
- இது, வியாபார வழக்கமாகவோ அல்லது சரக்குகளை அதிக எண்ணிக்கையில் கொள்முதல் செய்யும் போதோ வழங்கப்படுகிறது.



# வியாபாரத் தள்ளுபடி Trade discount




- இத் தள்ளுபடி இடாப்பில் கழித்துக் காட்டப்படும்.
- வியாபாரத் தள்ளுபடி கணக்கேடுகளில் எங்கும் பதியப்படமாட்டாது

# சில்லறை ரொக்க ஏடு

## Petty Cash Book

- சில்லறை ரொக்க ஏடு என்பது, அடிக்கடி நிகழக்கூடிய சிறு செலவினங்களான வண்டிச் சத்தம், கூலி, தபால் தந்தி செலவு, அச்சு, எழுதுபொருள் செலவு போன்றவற்றை பதியும் தனி ரொக்க ஏடாகும்.
- இதற்கென தனியாக அமர்த்தப்படும் சில்லறைக் காசாளர், சில்லறை ரொக்க ஏட்டினைப் பராமரிக்கிறார்.


JOHN & JAMES COMPANY
PETTY CASH BOOK

Dr. Cr.


| Receipt | Date | Details | VN | Total | Office expense | Van expense | Cleaning expense | Sundry expense |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2018 | | | $ | $ | $ | $ | $ |
| 50 | Mar.01 | Balance b/d | | | | | | |
| 200 | Mar.01 | Cash | | | | | | |
| | Mar.05 | Cleaning material | 42 | 25 | | | 25 | |
| | Mar.10 | Van wash | 43 | 20 | | 20 | | |
| | Mar.13 | Stationary | 44 | 15 | 15 | | | |
| | Mar.17 | Fuel | 45 | 35 | | 35 | | |
| | Mar.20 | Casual labor | 46 | 55 | | | | 55 |
| | Mar.22 | Donation | 47 | 10 | | | | 10 |
| | Mar.30 | Broom | 48 | 5 | | | 5 | |
| | | | | 165 | 15 | 55 | 30 | 65 |
| | | Balance c/d | | 85 | | | | |
| 250 | | | | 250 | | | | |
| 85 | Apr.01 | Balance b/d | | | | | | |
| 165 | Apr.01 | Cash | | | | | | |

# முன் பணமீட்பு முறை
## Imprest System of Petty Cash

- முன் அனுபவத்தின் அடிப்படையில், சில்லறை செலவுகளை செய்வதற்காக, தேவையான அல்லது போதுமான அளவு ஒரு குறிப்பிட்ட தொகை, ஒரு குறிப்பிட்ட காலத்தின் முதல் நாளன்று, சில்லறைக் காசாளருக்கு வழங்கப்படும்.
- சில்லறைக் காசாளருக்கு முன்கூட்டி வழங்கப்படும் இத்தொகைக்கு ‘முன்பணம்’ என்று பெயர்.




# முன் பணமீட்பு முறை
## Imprest System of Petty Cash




- இத் தொகையிலிருந்து, சில்லறைக்காசாளர் செலவுகளை செய்து, அதனை சில்லறை ரொக்க ஏட்டில் பதிவு செய்கிறார்.
- ஒரு குறிப்பிட்ட காலத்தின் முடிவில், சில்லறைக் காசாளர் தலைமைக்காசாளரிடம் சில்லறை ரொக்க ஏட்டை சமர்ப்பிப்பார்.

# முன் பணமீட்பு முறை
## Imprest System of Petty Cash

- தலைமைக் காசாளர் சில்லறை செலவினங்களை கூர்ந்து ஆராய்ந்து பார்த்துவிட்டு, சில்லறைக் காசாளர் செய்த செலவுகளுக்கு சமமான ஒரு தொகையை அவரிடம் தருவார்.
- இதனையே முன்பன மீட்பு முறை என்று அழைக்கப்படுகின்றது.



| ரொக்கத் தள்ளுபடி | வியாபார தள்ளுபடி |
|---|---|
| பொருளை வாங்கியவர் தொகையை முன்கூட்டி செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. | வாங்குபவர் அதிகப்படியான எண்ணிக்கையில்,பொருட்களை வாங்கும் பொருட்டு அவர்களை ஊக்குவிப்பதற்காக இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது |
| ரொக்கத் தள்ளுபடி, விற்றவர் அல்லது கடனீந்தோரால் வாங்கியவர் அல்லது கடனாளிக்கு தொகையைத் திரும்ப செலுத்தும் போது வழங்கப்படுகிறது | வியாபாரத் தள்ளுபடி, விற்றவரால் வாங்கியவருக்கு பொருட்களை விற்கும் போது வழங்கப்படுகிறது. |
| இத் தள்ளுபடி திரும்ப செலுத்தும் காலத்தை அடிப்படையாகக் கொண்டது. | இத் தள்ளுபடி பொருட்கள் வாங்கிய அளவினை அடிப்படையாகக் கொண்டது. |
| இது, கணக்கேடுகளில் பதியப்படுகிறது | இது, கணக்கேடுகளில் பதியப்படுவது இல்லை |
| இது, இடாப்பிலிருந்து கழித்துக் காட்டப்பட மாட்டாது. | இது, இடாப்பிலிருந்து கழித்து காட்டப்படும். |

# சில்லறை ரொக்க ஏடு பராமரிப்பதால் உண்டாகும் நன்மைகள்

Advantages of Maintaining Petty Cash Book


- 1. செலவினங்களை நல்ல முறையில் கட்டுப்படுத்த முடியும்.
- 2. முதன்மைக் காசாளரின் நேரம் மிச்சமாகிறது.
- 3. சிறு செலவினங்களால் ரொக்க ஏட்டில் அதிக சுமை இல்லாமல் இருக்கும்.
- 4. ரொக்க ஏட்டிலிருந்தும், சில்லறை ரொக்க ஏட்டிலிருந்தும், பேரேட்டில் எடுத்தெழுதுவது மிகவும் சுலபமானது



# ரொக்க ஏட்டில் தள்ளுபடியைப் பதிவு செய்வது பற்றி குறிப்பு வரைக.


Write a brief note on accounting treatment of discount in cash book

- ரொக்கபத்திகள் வழக்கம் போல இருப்புக் கட்டப்பட்டு அது அடுத்த நாள் அல்லது காலத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும்.
- இருந்த போதிலும் தள்ளுபடி பத்திகள் இருப்புக்கட்டப்பட மாட்டாது.



# ரொக்க ஏட்டில் தள்ளுபடியைப் பதிவு செய்வது பற்றி குறிப்பு வரைக.

Write a brief note on accounting treatment of discount in cash book





- அவைகள் பற்றுப்பக்கம் தனியாகவும், வரவுப்பக்கம் தனியாகவும் கூட்டப்பட வேண்டும். பற்றுப் பக்கத்தில் உள்ள தள்ளுபடி பத்தியின் மொத்தம், வாடிக்கையாளர்களுக்கு அளித்த தள்ளுபடியைக் காட்டுகிறது. இத்தொகை, அளித்த தள்ளுபடி கணக்கில் பற்று செய்யப்பட வேண்டும்.

# ரொக்க ஏட்டில் தள்ளுபடியைப் பதிவு செய்வது பற்றி குறிப்பு வரைக.

Write a brief note on accounting treatment of discount in cash book


- வரவுப் பக்கத்தில் உள்ள தள்ளுபடியின் மொத்தம், பெற்ற தள்ளுபடியைக் காட்டுகிறது. இத்தொகை பெற்ற தள்ளுபடி கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.



| Date | Details | Discount Allowed £ | Cash £ | Bank £ | Date | Details | Discount Received £ | Cash | Bank |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2012 Feb | | | | | 2012 Feb | | | | |
| 1 | Balance b/f | - | 12 | - | 1 | Balance b/f | - | - | 35 |
| 3 | T.R: J. | 2 | - | 31 | 5 | | | | |
| 4 | | | | | 10 | | | | |
| 22 | | | | | 15 | | | | |
| 28 | | | | | 23 | | | | |
| | | | | | 28 | | | | |

# எதிர்ப் பதிவை உதாரணத்துடன் விளக்குக. Brifly explain about Contra Entry with examples.

- ஒரு நடவடிக்கையில், ரொக்கம் மற்றும் வங்கி என்ற இரு கணக்குகளும் தொடர்பு பெற்றிருந்தால், அந் நடிவடிக்கையின் இரு தன்மைகளும் ரொக்கஏட்டில் பதியப்படுகின்றன.
- அவ்வாறு ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகள், ரொக்க ஏட்டில் பதியப்பட்டால், அது எதிர்ப்பதிவு எனப்படும்.


Example

Example of Contra Entries

Jan 4 $200 from office are deposited into bank.
Jan 8 $350 are withdrawn from bank for office use.

Double column cash book

Dr. Cr.

| Date | Particulars | LF | Cash ($) | Bank ($) | Date | Particulars | LF | Cash ($) | Bank ($) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Jan 4 | Cash | c | | 200 | Jan 4 | Bank | c | 200 | |
| Jan 8 | Bank | c | 350 | | Jan 4 | Cash | c | | 350 |


# எதிர்ப் பதிவை உதாரணத்துடன் விளக்குக. Brifly explain about contra entry with examples.




- உ.ம் 1. வங்கியில் பணம் செலுத்தியது :
- இது ரொக்க ஏட்டில் பற்றுப் பக்கத்தில் உள்ள வங்கிப் பத்தியிலும் மற்றும் வரவுப் பக்கத்தில் உள்ள ரொக்கப் பத்தியிலும் பதியப்படும்.

# எதிர்ப் பதிவை உதாரணத்துடன் விளக்குக. Brifly explain about contra entry with examples.

- உ.ம் 2. வங்கியிலிருந்து அலுவலக செலவுகளுக்காக பணம் எடுத்தது :
- இது ரொக்க ஏட்டில் பற்றுப் பக்கத்தில் உள்ள ரொக்கப் பத்தியிலும் மற்றும் வரவுப் பக்கத்தில் உள்ள வங்கிப் பத்தியிலும் பதியப்படும்.



# வங்கி மேல்வரைப் பற்று Bank Overdraft


- வங்கிக் கணக்கில் உண்மையான இருப்புக்கு அதிகமாக எடுப்பு செய்யும் போது, அவ்விருப்பினை இது குறிக்கின்றது.
- இத்தகைய வசதி நடப்பு கணக்கு வைத்திருப்போருக்கு மட்டும் அளிக்கப்படுகின்றது.
- இவ்வாறு அதிகப்படியாக எடுத்த தொகைக்கு, வட்டி கணக்கிடப்படுகிறது.




# வங்கிச் சரிகட்டும் பட்டியல்

## Bank Reconciliation Statement

- ரொக்க ஏட்டில் செய்யப்படக் கூடிய ஒவ்வொரு பதிவிற்கும், வங்கியரால் பராமரிக்கப்படக்கூடிய செல்லேட்டில் சரிநிகர் பதிவு இருக்க வேண்டும்.
- அதேபோன்று வங்கிச் செல்லேட்டில் உள்ள ஒவ்வொரு பதிவிற்கும் சரிநிகர் பதிவு ரொக்க ஏட்டில் இருக்க வேண்டும்.



# வங்கிச் சரிகட்டும் பட்டியல்
## Bank Reconciliation Statement




- வங்கி இருப்பு இரு ஏடுகளிலும் ஒரே தொகையினைக் காண்பிக்க வேண்டும்.
- இரண்டு இருப்புகளும் வெவ்வேறாக இருந்தால், அதற்கான காரணங்களை விளக்குவதற்காக தயாரிக்கப்படும் அறிக்கையையே, வங்கிச் சரிக்கட்டும் பட்டியல் என்று அழைக்கப்படுகிறது.

| றொக்க ஏட்டின் வங்கிப்பத்தி | வங்கி அறிக்கை |
| --- | --- |
| இது, வணிக நிறுவனத்தால் தயாரிக்கப்படுகின்றது | இது, வங்கியால் தயாரிக்கப்படுகின்றது |
| றொக்க வைப்பு , பற்றுப் பக்கத்தில் பதிவு செய்யப்படும் | றொக்க வைப்பு , வரவுப் பக்கத்தில் பதிவு செய்யப்படும் |
| காசோலை வைப்பு செய்யப்படும் பொழுது அதே நாளில் பற்று வைக்கப்படும். | காசோலை வசூலான பின்புதான், வங்கி அறிக்கையில் பதிவு செய்யப்படும். |
| றொக்க எடுப்பு , வரவுப் பக்கத்தில் பதிவு செய்யப்படும் | றொக்க எடுப்பு , பற்றுப் பக்கத்தில் பதிவு செய்யப்படும் |

நிலை அறிவுறுத்தலின்படி வங்கியால் செலுத்தப்பெறும் ஏதேனும் இரண்டு செலவுகளை தருக.

- 1. காப்பீட்டு முனைமம்
- 2. தொலைப்பேசிக் கட்டணம்
- 3. கடன் மீதான தவணை அல்லது வட்டி



# கீழ்கண்ட வாக்கியத்திற்கு ஒரு வார்த்தையில் விடைதருக.

- (அ) வங்கியால் அளிக்கப்படும் வாடிக்கையாளர் கணக்கின் நகல்:
- விடை : வங்கி அறிக்கை அல்லது செல்லேடு
- (ஆ) வங்கி அறிக்கையின் படி பற்றிருப்பு
- விடை : மேல்வரைப்பற்று அல்லது மிகை எடுப்பு



# கீழ்கண்ட வாக்கியத்திற்கு ஒரு வார்த்தையில் விடைதருக.





- (இ) ரொக்கஏட்டின் படி இருப்பு மற்றும் வங்கி அறிக்கையின் படி இருப்பு வேறுபடுவதற்கான காரணங்களை பட்டியலிடும் அறிக்கை:
- விடை : வங்கிச் சரிகட்டும் பட்டியல்

பின்வரும் வாக்கியங்களை ஏற்றுக் கொள்கிறாயா? ஏற்றுக் கொண்டால் 'ஆம்' எனவும், ஏற்றுக் கொள்ளாவிட்டால் 'இல்லை' எனவும் பதிலளிக்கவும்.

- 1) வங்கிச் சரிகட்டும் பட்டியல் வங்கியரால் தயாரிக்கப்படுகிறது
- விடை : இல்லை
- 2) வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கு முன்னர் ரொக்க ஏட்டினை சரிகட்டுவது கட்டாயமானது.
- விடை : ஆம்



# பின்வரும் வாக்கியங்களை ஏற்றுக் கொள்கிறாயா? ஏற்றுக் கொண்டால் ‘ஆம்’ எனவும், ஏற்றுக் கொள்ளாவிட்டால் ‘இல்லை’ எனவும் பதிலளிக்கவும்.




- 3) வங்கி அறிக்கையின் படி வரவிருப்பு என்பது மேல் வரைப்பற்றாகும்
- விடை : இல்லை


# பின்வரும் வாக்கியங்களை ஏற்றுக் கொள்கிறாயா? ஏற்றுக் கொண்டால் ‘ஆம்’ எனவும், ஏற்றுக் கொள்ளாவிட்டால் ‘இல்லை’ எனவும் பதிலளிக்கவும்.




- 4) வங்கியால் பற்று செய்யப்படும் வங்கிக் கட்டணம் வங்கி அறிக்கையின் படியான இருப்பினை அதிகரிக்கச் செய்யும்.
- விடை : இல்லை

பின்வரும் வாக்கியங்களை ஏற்றுக் கொள்கிறாயா? ஏற்றுக் கொண்டால் ‘ஆம்’ எனவும், ஏற்றுக் கொள்ளாவிட்டால் ‘இல்லை’ எனவும் பதிலளிக்கவும்.

- 5) ரொக்க ஏட்டின் வங்கிப்பத்திக்கும் ரொக்க ஏட்டின் ரொக்கப் பத்திக்கும் இடையேயான வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிய தயாரிக்கப்படுவதே வங்கிச் சரிக்கட்டும் பட்டியல் ஆகும்.




- விடை : இல்லை


# வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான மூன்று காரணங்களைத் தருக.

- 1. ரொக்க ஏட்டின்படியான வங்கி இருப்பும், வங்கி அறிக்கையின் படியான வங்கி இருப்பும், வேறுபட்டிருப்பதற்கான காரணங்களை அடையாளம் காண,
- 2. காசோலைகள் தீர்வடைவதில் ஏற்படும் காலதாமதத்தை கண்டறிய,

**FAST COMPANY**
**Bank Reconciliation Statement**
**January 31, 2016**

| | | | |
|---|---|---|---|
| Balance as per bank statement, January 31, 2015 | | | $ 10,000 |
| Add: | Deposit in transit | | 822 |
| | | | $ 10,822 |
| Deduct: | Outstanding checks | | |
| | Check No. 201 | $ 200 | |
| | Check No. 212 | 20 | |
| | Check No. 216 | 610 | 830 |
| **Adjusted cash balance** | | | $ 9,992 |
| Balance as per depositor's record, January 31, 2015 | | | 8,525 |
| Add: | Note receivable collected by bank | 1,588 | |
| | Interest earned during January | 50 | 1,638 |
| | | | $ 10,163 |
| Deduct: | Collection charges | 10 | |
| | NSF check | 100 | |
| | Service charges | 25 | |
| | Error on check no. 220 | 36 | 171 |
| **Adjusted cash balance** | | | $ 9,992 |

# வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான மூன்று காரணங்களைத் தருக.





- 3. ரொக்க ஏட்டின் வங்கி பத்தியின் சரியான இருப்பினை கணக்கிட,
- 4. வணிகத்தின் கணக்காளர்கள் மற்றும் வங்கி, நிதியினை தவறாக பயன்படுத்துவதை தடுக்க.

# காசோலை இன்னும் முன்னிலைப் படுத்தவில்லை என்பதன் பொருள்


What is meant by the term “cheque not yet presented”

- வணிகம் காசோலை விடுக்கும் பொழுது, வணிகம் அதனை உடனடியாக ரொக்க ஏட்டின் வரவு பக்கத்தில் பதிவு செய்யும்.
- ஆனால், இந்நடவடிக்கை வங்கி அறிக்கையில் அதேநாளில் பதிவு செய்யப்படாமலிருக்கலாம்



# காசோலை இன்னும் முன்னிலைப் படுத்தவில்லை என்பதன் பொருள்

What is meant by the term "cheque not yet presented"




- இது வங்கியில் முன்னிலைபடுத்திய பின்புதான், வங்கி அறிக்கையில் பதிவு செய்யப்படும்.
- இதனையே விடுத்த காசோலை இன்னும் முன்னிலைப் படுத்தவில்லை என்பதன் பொருள் ஆகும்.